| பாடக் குறியீடு | பாட தலைப்பு | திறமை |
|---|---|---|
| | **வருடம் I – பருவம் I** | |
| **BCOM 11012(F)** | கணணி பிரயோகம் - I | 2 |
| **BCOM 11022(F)** | வியாபாரத்திற்கான ஆங்கிலம் -I | 2 |
| **BCOM 11032(F)** | வணிகக் கணக்கு | 2 |
| **BCOM 11042(C)** | சுற்றுலா பராமரிப்பு முகாமை | 2 |
| **BCOM 11053(C)** | முகாமைத்துவ கொள்கைகள் | 3 |
| **BCOM 11064(C)** | நிதிக் கணக்கியல் | 4 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் I – பருவம் II** | |
| **BCOM 12072(F)** | கணணி பிரயோகம்- II | 2 |
| **BCOM 12082(F)** | வியாபாரத்திற்கான ஆங்கிலம் -II | 2 |
| **BCOM 12092(F)** | வணிக புள்ளிவிபரவியல் | 2 |
| **BCOM 12103(C)** | கிரய கணக்கியல் | 3 |
| **BCOM 12113(C)** | தொழில் வழிகாட்டல் | 3 |
| **BCOM 12123(C)** | நுண்பாக பொருளியல் | 3 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் II – பருவம் I** | |
| **BCOM 21133(C)** | முகாமைக் கணக்கியல் | 3 |
| **BCOM 21143(C)** | சந்தைபடுத்தல் முகாமை | 3 |
| **BCOM 21153(C)** | வர்த்தக மற்றும் நிறுவனச் சட்டம் | 3 |
| **BCOM 21163(C)** | பேரின பொருளியல் | 3 |
| **தெரிவு** | | |
| **BCOM 21173(E)** | வங்கியலும் நிதியியலும் | 3 |
| **BCOM 21183(E)** | இஸ்லாமிய வங்கியும் காப்புறுதியும் | 3 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் II – பருவம் II** | |
| **BCOM 22193(C)** | நிதி முகாமைத்துவம் | 3 |
| **BCOM 22203(C)** | உயர் நிதி கணக்கியலும் அறிக்கையிடலும் | 3 |
| **BCOM 22213(C)** | வரியிடல் | 3 |
| **BCOM 22223(C)** | கணக்காய்வும் உறுதியும் | 3 |
| **தெரிவு** | | |
| **BCOM 22233(E)** | கணக்கியல் கொள்கையும் நியமங்களும் | 3 |
| **BCOM 22243(E)** | சிறு வணிக முகாமைத்துவமும் முயற்சியாண்மையும் | 3 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் III – பருவம் I** | |
| **BCOM 31253(C)** | முகாமைத்துவ விஞ்ஞான பிரயோகம் | 3 |
| **BCOM 31263(C)** | கணக்கியல் தகவல் முறைமை | 3 |
| **BCOM 31273(C)** | செயற்பாட்டு முகாமை | 3 |
| **BCOM 31283(C)** | தந்திரோபாய முகாமை | 3 |
| **தெரிவு** | | |
| **BCOM 31293(E)** | பொது நிதி | 3 |
| **BCOM 31303(E)** | மனித வள முகாமை | 3 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் III – பருவம் II** | |
| **BCOM 32313(C)** | முயற்சியாண்மை வள திட்டமிடல் | 3 |
| **BCOM 32323(C)** | முதலீடு மற்றும் முகாமைத்துவ தொகுதி முகாமைத்துவம் | 3 |
| **BCOM 32333(C)** | வணிகத்திற்கான சர்வதேச சூழல் | 3 |
| **BCOM 32343(C)** | தந்திரோபாய முகாமைக் கணக்கியல் | 3 |
| **தெரிவு** | | |
| **BCOM 32353(E)** | நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு | 3 |
| **BCOM 32363(E)** | இலத்திரனியல் வர்த்தகம் | 3 |
| | **மொத்தம்** | **15** |

கட்டணங்கள்

| விபரம் | தொகை ரூபா. |
|---|---|
| **விண்ணப்ப செயற்படுத்தல்** | **1,000.00** |
| **முதல் வருடம்** | **40,000.00** |
| **இரண்டாம் வருடம்** | **36,000.00** |
| **மூன்றாம் வருடம்** | **30,000.00** |

- ஒரு வருடத்துக்கான கட்டணம் இரண்டு தவணைகளில் செலுத்த முடியும்.
- கட்டணங்கள் பதிவுக் கட்டணம், பரீட்சை கட்டணம், கருத்தரங்கு கட்டணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.
- மீள் பரீட்சையின் போதும், மீள் பதிவு செய்யும் போதும் கட்டணங்கள் அறவிடப்படும்.

**குறிப்பு:** இக்கையேட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மாற்றும் அதிகாரம் பல்கலைக் கழகக்கிற்கு உரித்தாகும்.

**தொடர்புகளுக்கு:**


**பணிப்பாளர்,**
**வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும்**
**தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்**
இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகம்
பல்கலைக் கழக பூங்கா
ஒலுவில்-32360
இலங்கை

Tel : +94 67 20 52801
Email: cedpl@seu.ac.lk
www.seu.ac.lk




**வர்த்தகமாணி (பொது)**
**வெளிவாரிப் பட்டம்**

# B.Com (Gen). External

## 2014 / 2015



**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்**

**வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்**

**அறிமுகம்**

வர்த்தக மாணி (பொது) வெளிவாரிப் பட்டமானது கணக்கியல், நிதி, பொருளாதாரம், முகாமைத்துவம், மற்றும் வணிக சூழல் ஆகிய பாடநெறிகளை ஒருங்கிணைத்ததாக காணப்படுகிறது. இப்பாடத்திட்டமானது இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் மற்றும் நிதி பகுதியினால் வழங்கப்படுகிறது. இது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்துடன் ஒருங்கிணைந்து நடாத்தப் படுகின்றது.

இப்பாடத்திட்டமானது முகாமையாளர்களின் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பரந்த பயிற்சிகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. மேலும் இப்பாடத்திட்டமானது தற்போதைய தொழில் சந்தையின் கேள்வியினையும், வணிக செயற்பாட்டை நடத்துவதில் காணப்படுகின்ற இலத்திரனியல் வணிகத்தின் தொடர்ச்சியான தாக்கத்தினையும் கருத்திற்கொண்டு தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆங்கில மொழி ஆகிய பாடநெறிகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பினை அமுல்படுத்துவதற்கான பிரதான நோக்கம் கல்விப் பொதுத் தராதர உயர் தரப்பரீட்சையில் தகுதி பெற்ற, கல்விசார் ஏனைய தகைமைகளையும் இலங்கை பல்கலைக் கழக முறைமையின் கீழ் உள்வாரிபட்டப் படிப்பினை தொடர வாய்ப்பிழந்த மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதாகும்.

---

**அனுமதிக்கான தேவைப்பாடுகள்**

**வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்க்கான குறைந்தபட்ச தகுதி பின்வரும் அடிப்படைகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.**

1. கல்வி பொதுத் தராதர உயர் தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது மூன்று (3) பாடங்களில் ‘S’ தரத்திலான சித்தியினை பெற்றிருப்பதுடன் பொது சாதாரண பரீட்சையில் குறைந்தது 30 புள்ளிகளை அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தீர்மானிப்பட்ட புள்ளியினை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பெறப்பட்டது.

**அல்லது**

3. இலங்கை தொழிநுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பாடநெறி (இரண்டு வருட பாடநெறி)

**அல்லது**

4. இலங்கை தொழிநுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் அல்லது கல்வி அமைச்சின் மேலதிக கற்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் வணிகத்தில் கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் சான்றிதழ்

**அல்லது**

5. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்துடன் AAT stage (III) அல்லது CIMA Stage – II, அல்லது Chartered (CASL) Stage – II. அல்லது AAT இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

6. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செனட் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தகைமை.

**மற்றும்**

அவசியம் ஏற்படுமிடத்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் தெரிவுப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் திருப்திகரமான புள்ளியினை பெற்றிருத்தல்.

**வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிபிற்கான அனுமதி மற்றும் பதிவு செய்வதற்குமான விலக்களிப்பு**

கீழ்வரும் ஏதாவது ஒரு தகைமையினைக்கொண்ட மாணவர்கள் வர்த்தகத்தின் முதலாவது பரீட்சையில் விலக்குப் பெற்று வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிபிற்கு தன்னை பதிவு செய்து கொள்ள முடியும்.

- இலங்கை உயர் தொழிநுட்பக் கல்வி நிறுவகத்தினால் (SLIAT) அல்லது இலங்கை தொழில் நுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் வர்த்தகத்தில் டிப்ளோமா அல்லது கணக்கியல் டிப்ளோமா கற்கைகளுக்கு

**அல்லது**

- இலங்கை பல்கலைக்கழகங்களில் வர்த்தகமாணி அல்லது வியாபாரமாணி அல்லது பொது நிருவாக மாணியின் முதலாவது பரீட்சையினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

**அல்லது**

- வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் உள்வாரியாக பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள் யாராவது வெளிவாரிப் பட்டத்தை மேற்கொள்ள விரும்பினால் செனட் சபையின் அனுமதியுடன் மேற்கொள்ள முடியும்.

**காலம்**

- வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பானது மூன்று கல்வியாண்டைக் கொண்ட கற்கை நெறியாகும். இது ஆறு பருவ காலங்களை கொண்டதாக காணப்படும்.
- ஒரு பருவகாலம் 22 வாரங்களைக் கொண்ட கல்வி நடவடிக்கைகளை உள்ளடக்கும். இதனுள் பருவகால இறுதிப் பரீட்சையும் உள்ளடக்கப்படும்.

## மொழி மூலம்

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலமாக விரிவுரைகள் நடாத்தப்படும். மாணவர்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப ஏதாவது ஒரு மொழியினை மாத்திரம் தெரிவு செய்து கொள்ள முடியும்.

## கற்கை நெறியின் நெகிழ்ச்சித் தன்மை

வர்த்தகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு தன்னை பதிவு செய்துகொள்ளும் மாணவர்கள் பல்வேறுபட்ட மட்டங்களில் வெளியேற முடியும். இப்பாடத்திட்மானது மாணவர்களின் சௌகரியத்திற்க்கும், தேவைப்பாடுகளுக்கும் ஏற்ப நெகிழ்ச்சியானதாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஏதேனும் காரணமாக மாணவர்கள் இக்கற்கையினை பூரணமாக பூர்த்தி செய்ய முடியாவிட்டால் அல்லது இடைநிறுத்த விரும்பினால் பின்வரும் சான்றிதழ்களைப் பெற இயலுமானதாக இருக்கும்.

i. வர்த்தகத்தில் சான்றிதழ் (Certificate in Commerce) - முதலாவது வருட கற்கையினை வெற்றிகரமாக பூரணப்படுத்தும்போது

ii. வர்த்தகத்தில் டிப்ளோமா (Diploma in Commerce) - இரண்டாவது வருட கற்கையினை வெற்றிகரமாக பூரணப்படுத்தும்போது.

## கற்பித்தல் முறை

பொருத்தமான பாட கைநூல்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு பருவ கால ஆரம்பத்திலும் அனைத்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் பாடநெறியானது சுய கற்கை முறையுடையதாகக் காணப்படும். இருப்பினும் பீடமானது ஒவ்வொரு பாடத்திற்க்கும் ஆகக்குறைந்தது இரண்டு நேரடி சந்திப்பு மூலமான விரிவுரைகளையும் ஏற்பாடு செய்யும்.

அடுத்த கல்வியாண்டிலிருந்து அனைத்துப் பாட கை நூல்களும் Moodle கற்றல் முகாமை முறைமை (LMS) ஊடாக பதிவேற்றம் செய்யப்படும்.